# நல்லூர் நாற்பது



கவிஞர் திரு. வி. கந்தவனம்

உ

# நல்லூர் நாற்பது

கவிஞர் திரு. வி. கந்தவனம்

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா.

2001

நல்லூர் நாற்பது
கவிஞர் திரு. வி. கந்தவனம்

முதற் பதிப்பு : ஆவணி 1971

வெளியீடு : நுணாவிலூர் தமிழ் மன்றம்,
சாவகச்சேரி

அச்சுப் பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

இரண்டாம் பதிப்பு : ஆவணி 2001

வெளியீடு : ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா

அச்சுப் பதிவு : விவேகா அச்சகம், கனடா

Nallur Naatpathu
V.Kandavanam

First Published : August 1971
Reprint : August 2001

Published by : Ontario Hindu
Religious Society
Canada.

Printed by : Viveka Printers
Canada.

# பதிப்புரை

"நல்லூர் நாற்பது" நல்லூர் முருகனின் புகழ்பாடும் ஒரு கவிதை நூல். 1963ம் ஆண்டளவில் இந்நூலின் சில பகுதிகள் இலங்கையில் தினகரன் பத்திரிகையில் வெளிவந்தன. 1971ம் ஆண்டு நல்லூர் முருகனின் மகோற்சவக் காலத்தில் மேற்படி நூல்களில் உள்ள பாடல்கள் அனைத்தும் ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தன. பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்த பொழுது முருகபக்தர்களாலும் இலக்கிய ஆர்வலர்களாலும் போற்றிப் புகழப்பட்ட இந்நூல் நூலாசிரியரான கவிஞர் திரு. வி. கந்தவனத்தின் பிறந்த கிராமத்தில் உள்ள நுணாவிலூர்த் தமிழ்மன்றத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிறந்த பக்தி இலக்கியமாகிய இந்நூலை சில பக்தர்கள் கனடாவில் தங்கள் வீடுகளில் பாராயணம் செய்து வருகின்றார்கள். தமிழீழ மக்களின் காவல் தெய்வமான நல்லூர் முருகப் பெருமானின் புகழ்பாடும் இந்தப் பாடல்கள் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்திற்கு இணையாக இருப்பதாகப் படித்துப் பயன்பெறும் அன்பர்கள் கூறுகின்றார்கள். அவர்களின் வேண்டுகோளின்படி தற்பொழுது நல்லூர் முருகப்பெருமானின் மகோற்சவ காலத்தில் கனடா நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வெளிவிடுவதில் பெருமை அடைகின்றோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த விவேகா அச்சகத்தினருக்கும் எங்கள் வெளியீடுகளுக்குப் பலவழிகளில் ஒத்துழைப்புத்தரும் அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் முருகப் பெருமானின் அருட்கடாட்சத்தினால் உந்தப்பெற்று இந்த அரும் பெரும் நூலை எழுதிச் சைவத்தமிழ் உலகுக்குத் தந்த என் பேரன்புக்குரிய கவிஞர் திரு. வி. கந்தவனம் ஐயா அவர்களுக்கும் இந்து சமயப் பேரவையின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறை பக்தர்கள் யாவரும் இந்நூலை படித்து இன்புற்றும் என்றும் தங்கள் வழிபாடுகளின் போது பாராயணம் செய்தும் பயன் பெற வேண்டுகின்றேன்.

வணக்கம்.

சிவ. முத்துலிங்கம்
உப செயலாளர்,
இந்து சமயப் பேரவை

உ

# பதிப்புரை

'நல்லூர் நாற்பது' நுணுவிலூர்த் தமிழ்மன்றம் வெளியிடும் மூன்றாவது நூலாகும். முன்னர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களுடைய 'முறிகண்டிப் பத்து', 'நுணுவிலூர்' ஆகிய இரு நூல்களை வெளியிட்டிருந்தோம். இப்பொழுது எல்லோராலும் போற்றப்படும் 'நல்லூர் நாற்பதை' வெளியிடத் திருவருள் கூடியிருப்பது குறித்து மகிழ்வடைகின்றோம்.

கவிஞர் வி. கந்தவனம் அவர்களது 'நல்லூர் நாற்ப'தின் சில பகுதிகள் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'தினகர'னில் வெளிவந்ததைத் தமிழன்பர்கள் பலர் அறிவார்கள். இவ்வாண்டு நூல் முழுவதையும் நல்லூர் திருவிழாக்காலத்தில் 'ஈழநாடு' வெளியிட்டு வைத்தது. இப் பக்திப்பாக்களை நூலாக்கி வெளியிடும் இவ்வேளையில் இவ்விரு பத்திரிகையாசிரியர்களின் தொண்டினை நன்றி யறிதலுடன் போற்றுகின்றோம்.

நூலுக்குச் சாத்துகவி வழங்கியுள்ள பண்டிதமணி அவர்களுக்கும், ஆசியுரைகள் வழங்கியுள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அறக்காவலர் அவர்களுக்கும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுக்கும், நல்லூர் நாற்பதைப் புகழ்ந்து பாடியுள்ள புலவர் பெருமக்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

நல்லூர் முருகன் திருவுருவப் படத்தை இந் நூலில் வெளியிட உரிமையளித்த நல்லை தேவஸ்தான வெளியீட்டு அதிபருக்கும், திரு. குல. சபாநாதன் அவர்களுக்கும், நூலை வெளியிடப் பலவாறு உதவிபுரிந்த திரு. சி. சதாசிவம் அவர்களுக்கும், இதனைத் தமக்கேயுரிய தனித்துவ முறையில் மிகவும் அழகாக அச்சிட்டுத்தந்த திருமகள் அழுத்தகத்தாருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நுணுவிலூர்த் தமிழ் மன்றம்,
சாவகச்சேரி, 16-8-1971.

**வி. மார்க்கண்டு**
செயலாளர்

உ

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

வழங்கிய

# சாத்துகவி

நல்லூர்த் திருமுருகை நாற்பது பாடல்களாற்
பல்லூரும் போற்றப் பரவினர் — செல்லூரும்
செந்தமிழ்ச் சோலைவளர் தென்மராட் சிக்கணிசெய்
**கந்த வணக்கவிஞர் காண்.**

உ
சிவமயம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
அறக்காவலர்
குகஸ்ரீ இ. குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள்
வழங்கிய

# ஆசியுரை

நல்லைக் கந்தப்பெருமான் பேரில் பல புலவர் பெருமக்கள் கவிதை புனைந்துள்ளனர். அவர்களது வழியில், கவிஞர் கந்தவனமும் முருகன் மீது கவிதை புனைந்து அர்ப்பணித்துள்ளார். அன்புத்தேன் ஊற்றெடுக்கும் இக் கவிதையைப் பாடிய கவிஞர், கந்தப் பெருமானின் பேரருளால் எல்லா நலமும் பெறுவாராக.

இ. குமாரதாஸ் மாப்பாண முதலியார்

உ

சிவமயம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

கவிஞர் கந்தவனம் நல்லைக் கந்தன்மேல், நாற்பது கவிகள் புனைந்து கந்தன் திருவடிகளுக்குச் சமர்ப்பித்துள்ளார். சொல் ஆழம், பொருள் ஆழம் நிறைந்த இப் பாமாலை கந்தனுக்கு அலங்காரமாக, பக்தி மணம் கமழும் ஆரமாகத் திகழ்கின்றது.

பழுதிலாத சொன் மணியினைப் பக்திசெய்து அன்பு முழுதுமாகிய வடத்தினில் கோத்துக் கந்தனுக்குத் தொழுது சாத்திடும் கவிஞர் கந்தவனம் அவர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிடைக்க நல்லைக்கந்தன் திருவடிகளை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்

உ

# நல்லூர் நாற்பது

## அணிமாலை

செந்தமிழ்த்தேன் பொங்கத் திரு''நல்லூர் நாற்ப''தெனக்
கந்தவனம் தந்த கவியமுதம்—சிந்தனைக்குப்
போதனையைப் பூக்கும் புலனுக் கடங்காத
வேதனையைத் தீர்க்கும் விளக்கு.

கானமிகு கலைவண்ணக் கருணை தோன்றும்
கருதுமடி யார்வணங்கும் காட்சி தோன்றும்
மானமிகு தமிழர்பணி வாய்மை தோன்றும்
மாப்பாண முதலிகுல வண்மை தோன்றும்
தானமிகு தவந்தோன்றும் சமயந் தோன்றும்
சமரசநன் னெறிதோன்றும் தனிவேல் தோன்றும்
ஞானமிகு சிவகுமரன் நடனந் தோன்றும்
"நல்லூரின் நாற்பதினை" நயக்குங் காலே.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

★

எல்லையிலாப் பரம்பொருளை எண்ணம் வைத்தே
எழுச்சிபெறக் கந்தவனக் கவிஞர் போற்றி
நல்லையுறு கந்தனுக்கே யாத்த சீரார்
நல்லூர்நாற் பதுவென்னும் நறும்பா கொண்டேன்
சொல்லிணைந்த தேனுண்டேன் சூரரைக் காக்கச்
சூரனுடல் தடிந்தவுயர் சோதி தோன்ற
எல்லவரும் உய்யுவழி இரங்கி வேண்டும்
இணையற்ற தெய்வநெறி இலங்கக் கண்டேன்.

மதுரகவி இ நாகராஜன்

போற்றிச் சிறப்புணர்த்திப் பொற்பாதம் வேண்டிநின்று
நாற்பதுநற் பாடலினால் நல்லூரின்—வேற்பெருமான்
சீர்பரவு கந்தவனச் செஞ்சொற் கவிவலவன்
ஊர்பரவ வாழி உவந்து.

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

★

செந்தமிழர் தெய்வச்செவ் வேளின் சீர்த்தி
திருமுருக நாமத்தின் சிறந்த கீர்த்தி
பைந்தமிழே வடிவான இனிய காட்சி
பாவங்கள் வேரறுக்கும் அரிய மாட்சி
வந்தனைகள் செய்வோரைக் காக்கும் வண்மை
வைவோரைக் கூடவாழ் விக்குந் தண்மை
கந்தவனம் தந்தநல்லை நாற்ப தின்கண்
கந்தனருள் கூட்டுவதைக் கண்டேன் விண்டேன்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை

★

ஒட்டாரை ஒட்டித் திரிவோரை
உண்மையை ஊக்கத்தை
விட்டாரை வீம்பினால் வீழ்ந்தோரை
மேன்மையை விற்றார்தம்மை
முட்டாமல் முட்டி முருகன்அரு
ளால்முன் னேற்றுவழி
கட்டான நாற்பதிற் கந்த
வனக்கவி காட்டினனே.

கவிஞர் வே. ஐயாத்துரை

முன்னை நாளருள் மூப்பையும் உன்னருள் திறத்தின்
பின்னை நாள்நிகழ் பெருமையும் அருமையும் உணர்த்தும்
சுன்ன லார்தமிழ் நாற்பதும் நல்லைவாழ் கந்தா
உன்னி யோதிடச் சக்தியொன் றுதித்திடல் உணர்வேன்.

**கவிஞர் கல்வயல் வே. குமாரசுவாமி**

★

சிந்தைமகிழ் நல்லையமர் திருமுருக னடிபரவி
வந்தனைசெய் அடியவரும் வானவரும் வாயூறக்
கந்தனருட் கவியரசன் கந்தவனம் கனிந்துமிகத்
தந்தகவி நாற்பதுவும் தமிழ்க்கடவுள் அருளமுதே.

**வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை**

★

கந்தவ னக்கவி ஞன்குடி வன்கரு
ணைக்கும ரன்பதமே
சிந்தைநி னைந்தருள் வந்திட நல்லவர்
செல்வவ ளம்பெறவே
தந்தையு யார்முனி நாவல ஞர்வரு
தண்புகழ் நல்லூரான்
செந்தமிழ் காக்கவ ழங்கிய நாற்பது
சிந்தை விளங்குகவே.

**கவிஞர் தெல்லியூர் நா. ஆறுமுகம்**

உ
சிவமயம்


# நல்லூர் நாற்பது

## விநாயகர் காப்பு

ஐயா திருஞான மெய்யா அணைத்தருளுங்
கையா கணபதியே காத்தருள்வாய் — பொய்தீர்வேல்
நல்லூர் முருகன்ருள் நாற்பதுபா நான்படைக்க
எல்லா நலங்களுமிங் கீந்து.

## கலைமகள் வணக்கம்

நல்லூரருட் கந்தன்கழல் நானும்நலப் பாட்டால்
எல்லோர்முனும் பாடத்துணிந் தேன்நின்னருள் தேனிங்
கில்லையெனில் இந்நாற்பதை ஏலான்எழில் வேலன்
நல்லாயிருந் தென்னுவினில் நல்காயருள் வாணீ.




நல்லூர் முருகன்

- உபயம் : நல்லூர் தேவஸ்தானம்

# 1
# போற்றிப்பத்து

அன்பாகி அருளாகி அறிவாய் நல்ல
அமிழ்தாகி அழகாகி அனைத்து மாகி
இன்பாகி இருந்துள்ள இருளைப் போக்கி
எமையாளும் உமையாளன் இறைவன் இந்தத்
துன்பாகுங் குமிழ்வாழ்வில் துவள்வார் தொல்லை
துடைத்தாள அருள்செய்யக் கிடைத்த செல்வா
உன்பாதம் உன்பார்வை உன்வேற் கைநல்
லூருண்டே உறுநோய்கள் உண்டோ போற்றி!

உளனுளும் உயிராயெம் உள்ளம் உள்ளான்
உலகண்ட வெளியுள்ள உலகக் கோமான்
வளனுகும் வாழ்வுக்கு வழியாய் மாயை
மலம்போக்கும் மணியான மருந்தாய் மாதை
அளவான அரைமார்பில் அணைத்தா னுக்கோர்
அழகாறு முகமான ஆற்றல் ஊற்றாய்
வளமார்நல் லூர்போற்றி வாழும் எங்கள்
மனம்பற்றி மகிழ்வூட்டும் மயிலா போற்றி!

வல்லாரின் வல்லானுய் வடிவே லாயுள்
    வளமாக்கி யாய்நல்ல வற்று வூற்றுய்
எல்லாரின் உள்ளத்தும் என்றும் நின்றே
    இயல்பாக இனிக்கின்ற இன்ப மாகி
இல்லாரின் உள்ளாரின் இன்னல் யாவும்
    இல்லாமற் செய்கின்ற எழிலார் தூய
நல்லூரிற் பெருமானுய் நாளும் நம்மை
    நன்ருகக் காக்கின்ற நாதா போற்றி!

மெய்யான பொருள்மேனிச் சிவனுர் தாமும்
    மேலாக வளர்த்தஎழில் மென்பொன் மானும்
மெய்ஞ்ஞானக் கலையாவும் மிக்கான் ஐந்து
    கையானும் தம்பியரும் களிப்பாற் பூக்க
உய்வான கருமங்கள் உண்மை ஓங்க
    உலகாளும் உனதூறும் உள்ளம் கொள்ளத்
தெய்வானை வள்ளிமயில் செய்வேல் நல்லூர்
    செய்துள்ள தவமென்ன செந்தாள் போற்றி!

கொடிதீர்த்த இடைக்காலங் கோடி கோடி
    கொண்டுன்னை உள்ளத்திற் கொடுமை மாண்டு
விடிவாகும் வாழ்வென்று விம்மிப் பொங்கி
    விழியாறு பாய்ந்தோட விட்டே யாவும்
அடிதீர்ந்த மரமாகி அண்டிக் கண்டே
    அணுவாக வணுவாக வனுப விக்கும்
அடியார்கட் கருள்பாலித் தல்லல் தீர்க்கும்
    அழகான நல்லூரின் அறிவே போற்றி!

வேறேது பேறேது வேலே போதும்
வேண்டாத தொல்லைகளும் வீழ்ந்தே தீரும்
மாறாத இளமைஎழில் மணமுஞ் செய்ய
மலரடியும் மயக்கிவிடும் முகங்க ளாறுஞ்
சீறாத பாம்புமயில் சீர்வேல் சேவல்
திருவள்ளி தெய்வானை தருநற் காட்சி
ஆறாத அடியவருக் கமிழ்தே யாக
அருள்வாயே நல்லூரின் அறிவே போற்றி!

முனைப்பொழிய முருகுதரும் முருகன் நீயே
மூண்டதுயர் முடித்துவரும் முனிவன் நீயே
நினைப்பவர்கள் நின்னடியை நீங்கா இன்ப
நீர்வழிய நெக்குருகி நீந்தா நிற்பார்
உனைப்புரியின் உண்மைநல ஒளிசேர் வாழ்க்கை
உண்டுபல கண்டுவழி உலகம் உய்யும்
தினைப்புலநல் மயில்பின்னர் சென்ற நல்லூர்த்
திருமேனி நம்பின்னர் வருமே போற்றி!

ஆண்டுபல ஆரியர்கள் ஆண்ட நல்லூர்
ஆடிஒரு வேட்டைதனிற் பெருமாள் ஆண்டே
மீண்டுமுயிர் ஊட்டிஎழில் மிகுநல் லூராய்ப்
பூண்டுபுகழ் ஆண்டரசு புரிந்தே நின்னை
வேண்டிஅரி தானவொரு வேலை செய்தான்
வெற்றிஎழில் வேலருளின் பெற்றி போற்ற
நீண்டபுகழ்க் கோயிலவன் நிறுவித் தந்தான்
நின்னடிகள் நாம்காண நின்றாய் போற்றி!

வரலாற்றுப் புகழ்கொண்ட வளநல் லூரில்
வன்கனக சூரியனும் மாடப் பொன்னர்
நிரலான வீடுநெடுஞ் சாலை நீள
நிலையாகக் கலையாக நிறுவப் பின்னை
பரராச சேகரனும் பக்கம் எல்லாம்
பலகோயில் கண்டானே பாரோர் நாளும்
கரமேந்திக் கடலாகக் கண்ணீர் கொட்டக்
கலைக்கோயில் நீகொண்டு களித்தாய் போற்றி!

ஆடிமயில் ஏறிவரின் அடியார் கூட்டம்
ஆடியுற வாடிவரும் அருளில் இன்பம்
கூடிவரப் பாடிடுவர் கூர்வேல் போற்றி
குலவுமெழில் நிலவுபுகழ் கூட்ட வீதி
மாடிமனை மலர்ப்பொழில்கள் மலியும் நல்லூர்
வாழ்ந்துமகிழ் வெய்திவரும் மயிலா நம்மைத்
தேடியிடர் தீர்க்கவருந் திருத்தா ளுண்டே
தேவையிவண் ஒன்றுமிலைத் தேவர் நாமே!

# 2

# சிறப்பிரப்பத்து

விடுநலத் தூய்மைமிக விளங்கு மெங்கும்
விண்ணவரின் தன்மையுடன் விரதங் கொள்ளக்
கூடுமடி யார்களது குமரா வுள்ளக்
குன்றிலருள் பெய்துதவக் குடிகொள் வாயே
நாடுகொடும் போக்குகளை நன்றே தள்ளி
நன்மைதரும் நல்வழியை நாளும் உன்னி
நாடிவிடுந் தொல்லைகளை நாசஞ் செய்யும்
நல்லூரான் கொடியேற்றம் நாளை என்றே !

விண்ணவரும் வியக்கின்ற வீதிப் பந்தல்
மிகுதோர ணங்களெழில் விளக்குக் கும்பம்
கண்ணைஅட கட்டிவிடுங் கலைக ளேறும்
காட்சிபல கலைஞர்களின் மாட்சி கூறும்
தன்னெனவே கதிரவனுந் தன்மை மாறும்
தக்கவழி காட்டிநலத் தன்மை யூட்டி
மண்ணுலகி லடியவரின் வாழ்வை யாக்கும்
மயிலோனின் கொடியேற்றம் மறுநாள் என்றே !

கூடிடுவர் மண்வீழாக் கும்பல் வெள்ளம்
கூற்றுகிக் கொடுமைகளைக் கொல்லும் நின்னைப்
பாடிடுவர் பண்ணோடு பைந்தாள் தேனைப்
பருகிடுவர் பதறிடுவர் பத்தி முத்தி
ஆடிடுவர் அப்பா ஓ! ஆட்கொள் என்பார்
அலறிடுவர் குளறிடுவர் ஆவல் மீறி
வாடிடுவர் வலியபிடி வாதம் நூறல்
வாழ்வுநலம் நல்லூரான் வைப்பா னென்றே!

தங்கும்பல் கோடிதவத் தண்ணூர் நல்லூர்
தன்னாலே ஊரோங்கத் தரணி யோங்க
எங்கும்பல் இன்பங்கள் இலங்க என்றும்
இருள்மாளும் ஒளிவீச ஏற வென்றே
செங்குந்த செம்முள்ளச் சீலர் கோலத்
தேர்வைத்துக் கொடிக்கான சேலை ஈய
பொங்கும்நல் வேதமுடன் மங்க ளங்கள்
பொருந்தவுயர் பொழுதுகொடி போற்றி ஏறும்!

தித்திக்கும் மருந்தாகித் திறந்து கண்ணைச்
சிறந்துய்யும் வழிதன்னைத் தெரிக வென்றே
பத்தர்க்கு வழிகாட்டிப் பசியும் போக்கிப்
பார்த்துள்ளம் பழுத்தூறப் பத்தாம் நாளில்
முத்தொக்கு மஞ்சத்தில் முற்பி றப்பில்
மூண்டுள்ள தீவினைகள் முடித்தே நன்றாய்
எத்திக்கும் இடங்கூடி இருகை ஏந்தி
ஏற்றவே போற்றவே எழுவாய் நீயே!

மயிலேறி மனங்கொண்ட வள்ளி யோடு
வாழ்வாங்கு வாழ்கென்று வாழ்த்தி நல்ல
சுயமான அறிவேற்றித் துணிவு தந்து
துன்பங்கள் துன்புற்றுத் துவண்டே மாள
நயமுறு சிரிப்போடு நற்கண் ணோடு
நல்லூரி னருள்திக்கு நாலும் பாயப்
பயனூறு நீதந்து பதினே ழாம்நாள்
பனிப்பூச்சப் பரம்மீது பவனி கொள்வாய்!

திசையாவும் வென்றுங்கு திரும்பும் வேளை
திடங்கொண்ட செயல்வீரன் திறமை காட்ட
அசைவெய்தக் கைலாய வழகுக் குன்றம்
அடித்தோடிப் பெருக்காகி யழித்த கங்கை
விசைகண்ட அருளுள்ளம் விரலாற் சற்றே
மிதித்துள்ள திறமைக்கு விதித்தே யெல்லை
இசைகேட்டு மகிழ்ந்துள்ளம் இளகுங் காட்சி
ஈர்க்கும்பத் தொன்பதினில் எங்கள் நெஞ்சே!

ஆலால முண்டமரர் அல்லல் தீர்த்தோன்
ஆள்கின்ற அடியாரின் அமிழ்தக் குன்றம்
மேலேறி வருங்கோல வேளை பத்தர்
மேல்வாங்கும் கண்ணோடு மெய்ம' றந்தே
பாலாகத் தேனாகப் பழங்க ளாகப்
பார்த்தொன்றிப் பருகிடுவர் பாரி லோங்க
வேலோடு விளக்கின்ற மெய்விருந்தாம்
மேலான எழிற்காட்சி வேறெங் குண்டோ?

தங்கமயில் மீதிலொரு தண்டா பாணித்
தனியழகுக் கோலமதைத் தாங்கி வந்தே
பொங்குபுகழ் ஊர்த்தெருவைப் போர்த்தே ஆர்த்துப்
போற்றியுனைப் பாடியுள்ளம் பொலிவார் பொன்னுய்
மங்கிவரும் மாலையிலே மாம்ப ழத்தின்
மாண்கதையின் உட்பொருளை மனத்தே கொள்ள
வெங்குமுயி ரிருந்துமிக வினிப்பா யென்றே
இருபத்தி ரண்டதனி லியம்பா நிற்பாய் !

நீண்டவுயர் கோபுரமுன் நின்றே யென்றும்
நீங்காத பேரன்பில் நீந்த மக்கள்
வேண்டவருள் ஆனைமுகன் மாம்ப ழத்தை
வேலான மேலான மெய்நாங் காண
ஆண்டியென மாண்டவெழி லணிக லன்கள்
ஆடைகளும் நீக்கிநிலை அழகைக் காட்டிப்
பூண்டுகலைக் கோவணமும் புகுவை கோயில்
புரியாத பொருளுக்குப் புதல்வ னென்றே !

தேரென்றுற் கருமகவுஞ் சிறந்தே யார்த்துத்
தெரிந்தின்பப் பயனூறித் திளைத்தே பூக்கும்
பேரொன்று பேச்சொன்று மூச்சு மொன்றே
பேசாத வாயெல்லாம் பேசும் நாளை
தேரென்று தேரென்று திருநாள் முன்னுள்
தேங்கிவந் தடியார்கள் திரள்வா ரன்றே
ஊரொன்றும் நல்லூரும் உலக மாகும்
ஊகூடும் வெள்ளத்துக் குவமை யுண்டோ !

மாடங்கள் மடங்கள்பேர் மண்ட பங்கள்
மன்றங்கள் பந்தல்கள் வாடி விடு
ஆடுங்காற் பந்தல்கள் அப்போ தொன்றும்
அந்தரக் குடிசைகள் அண்டி யுள்ள
வீடெல்லாம் விரிந்தோடி விளங்கும் நற்பேர்
வீதிகள் பாதைகள் மிஞ்சி யுள்ள
ஊடெல்லாம் கோடியோ டோடை பக்க
ஊரெல்லாம் உறைவரே உருகி மக்கள்!

விடிகாலை பெருக்காற்று வீதி யாவும்
விரைந்தோடிக் கடல்நல்லூர் விம்மிக் கூடும்
பிடிவாதம் பலவாறு பிடித்தே கீற்றுப்
பிறைகொண்ட சடையானின் பிள்ளை யன்புக்
கடியார்கள் ஆளாகி யாருய்க் கண்ணீர்
அலைமோத அழிவாக வலைக்கும் அல்லல்
விடியாத வாழ்நாளின் விடிவைக் காண
விரைந்துண்மை விளக்கத்தில் வியர்த்தே விழ்வார்!

அசையாத மணியோசை யாறு மார்க்க
அடிக்கமணி எட்டழகி லாறு கூடும்
திசையாவும் பழிதீர்ந்து சிறப்பி லோங்கத்
தீபங்கள் சின்னங்கள் ஈராய்ச் சூழ
இசைவாயும் கருவிகளும் இசைப்பப் பத்தர்
இருகைகள் தலைக்கேற இணையி லின்ப
விசைமீற விண்ணோர்க்கச் சிலிர்க்கத் திக்கு
வெல்லழகிற் பல்லழகிற் சொல்ல வொண்ணுப்—

பேரழகிற் சீரணியிற் பெற்ற நல்ல
ஊர்மயிலிற் சேர்கொடியு முற்ற வேலும்
ஈரழகி மார்களிரு பக்க மேற்க
வார்கருணை முறுவலுடன் வடிவி லோங்குந்
தேரெனவே பேரொளியுந் திகைத்து நிற்கச்
செல்லுகையிற் கொல்லுதுயர் வெல்லு கின்ற
ஆர்கழலும் அடியவருக் காகுங் காட்சி
அரகரவோ அரகரவோ அமிழ்தக் காட்சி!

பார்ப்பார்கள் பார்ப்பார்கள் பத்தர் கைகள்
பன்னியெழுந் துச்சிகொளப் பாங்கர் நீங்க
ஆர்ப்பார்கள் முருகான அமிழ்தை யுண்டே
யருமையோ வருமையென் றுடிப் பாடி
வார்ப்பார்கள் கண்ணீரை வற்று ஊற்றாய்
வடிவேலன் வழங்கவே வாழ்வின் பேற்றை
வேர்ப்பார்கள் வேலாஓ வேலா என்பார்
வேண்டுவன வேண்டாது வேண்டிக் கொள்வார்!

கார்கண்ட மயில்போலக் களிப்பார் பல்லோர்
கண்பெற்ற முகம்போல ஒளிப்பார் பல்லோர்
நீர்கண்ட நிலம்போல நிறைவார் பல்லோர்
நிகரற்ற நூல்செய்து நிலைப்பார் பல்லோர்
பார்கண்ட பொருள்பெற்ற பசியோர் பல்லோர்
பைந்தமிழைச் சுவைத்தினிது பயின்றோர் பல்லோர்
ஊர்கண்டு தேர்கொண்ட உருவத் தேனை
உண்டிங்கு பெற்றுள்ள உரிமை உய்வார்!

வாராத பேரில்லை வந்தே தீர்வார்
வாழ்நாளை வளமாக்கும் மனங்கொள் காட்சி
பாராத பேரில்லைப் பார்த்தே தீர்வார்
பயனென்று வேறில்லைப் பன்னீர்க் காட்சி
நேராத பேரின்பம் நேர்ந்தே தீரும்
நெஞ்சம்நெக் குருகிவிழும் நீர்க்கண் காட்சி
தீராத வினையாவும் தீர்ந்தே தீரும்
தீர்த்தம்வேல் ஆடவரும் திருப்பொற் காட்சி!

அடியார்கள் ஆளாகும் அருட்பாற் காட்சி
அல்லலுமட் டூழியமும் அழியுங் காட்சி
விடியாத வாழ்வங்கு விடியுங் காட்சி
விண்டமிழின் அமுதமணம் வீசுங் காட்சி
முடியாத முயற்சிகளும் முடியுங் காட்சி
முத்தமிழர் ஆட்சியினை முகருங் காட்சி
அடியார்கள் படிமீதில் ஆடிப் பாட
ஐவர்களும் தூநீரில் ஆடுங் காட்சி!

உடையாத உள்ளங்கள் உடையுங் காட்சி
உண்மையினை உணர்ந்தவர்கள் உருகுங் காட்சி
அடையாத அருமுரிமை அடையுங் காட்சி
அடியவர்கள் வீட்டுப்பே றடையுங் காட்சி
படையாக நெடுநேரம் படிகள் மீதில்
புடைசூழ்ந்த அடியார்கள் பூக்க முக்கண்
உடையானும் வேலோருஞ் சுரரு மொன்றாய்
உளமாடி நீராட உலகம் உய்யும்!

# 3

# வேண்டும்பத்து

ஆண்டவர்கள் அன்றுபுவி ஆற்றல் கொண்டோர்
ஆக்கமறி வூக்கமுடன் அறத்தில் வல்லோர்
நீண்டபுகழ் பூண்டவர்கள் நிகரில் லாதோர்
நீதிமுறை மாறுபட நீர்க்கண் ணோடே
ஈண்டவர்கள் இருள்படர இன்னல் சூழ
இருதலையிற் கொள்ளிஎறும் பானார் இங்கே
மீண்டவர்கள் மேன்மையுடன் நல்லூர் வேலா
விளங்கிவர நீஅருளல் வேண்டும் வேண்டும்!

இனிமையிலே ஏற்றமுடன் என்றும் வாழும்
இளமையிலே முழுமையிலே இளகுஞ் செம்மைத்
தனிமையிலே வன்மையிலே சங்கங் கண்ட
தகைமையிலே தாய்மையிலே சான்றோர் போற்றும்
கனிமையிலே கருத்தினிலே கடவுள் தன்மைக்
கருணையிலே கவர்வதிலே கற்றோர் தம்மைப்
பனிமையிலே பதுமையிலே பால்வாய்ப் பண்பில்
பழைமையிலே வழமையிலே அழகுக் காமோர்—

மொழியினிலே அரியதமிழ் மொழியைப் போன்றோர்
மொழிவேறொன் றில்லையென மொழிந்தார் சான்றோர்
விழியினிலே பெருமூச்சில் விழும்நீ ரோடு
வீரமொழி தீரமொழி வீழ்ந்தாள் தாழ்ந்தாள்
வழியெதுவு மில்லாத வறியோர் போல
வந்தகுறை எச்சமதில் வாழும் ஈனப்
பழியழிய நல்லூரிற் படைவேற் கந்தா
பார்த்தருள வேண்டுமவள் பார்மேல் ஓங்க!

துள்ளிவிழும் தொடர்அருவிக் கொடிபோல் அன்புத்
தூயவுயர் குழல்வீணை மதிபோல் பண்புப்
புள்ளிஎழில் மான்நடன மயில்போல் வெல்லும்
புலிவில்லு மீன்தென்றல் புயற்காற் றைப்போல்
உள்ளதமிழ் நம்முடலின் உயிரின் மேலாள்
உலகமுவந் துயர்த்திவரும் ஒப்பில் லாதோர்
வள்ளுவனைக் கம்பனிளங் கோவை வானோர்
வருந்தியருஞ் செயல்பெற்ற மருந்தை மிக்க—

அள்ளிவரும் காப்பியங்கள் ஐந்துங் கொண்டாள்
ஆழமறி யாதகடல் ஆனாள் மேனாள்
உள்ளிவரு வோர்உலைவு தீர அள்ளிக்
கொள்ளைவளங் கொடுத்தவுயர் கோன்மை கொண்டாள்
தள்ளியவள் வான்புகழைத் தரணி கொள்ளும்
தன்மையறி யாதவர்கள் தாழ்த்தி விட்டார்
கொள்ளமனங் கூடவிலைக் கொற்ற நல்லூர்
வள்ளிமயி லாஅவளை வாழ வைப்பாய்!

நன்றாகும் வாழ்விங்கு நாளை நம்மோர்
　　நடிப்பின்றி நஞ்சின்றி நல்லோர் வல்லோர்
நின்றேகும் நிலைப்பாதை நின்றே நேர்மை
　　நீங்காது துயர்சற்று நீடித் தாலும்
ஒன்றாகும் உயிர்ப்பண்பு நன்றாய் ஊறி
　　உருவாகும் எதிர்காலம் உணர்விற் கொண்டு
வென்றாகும் வரைமுந்திச் சென்றால் நல்லூர்
　　வேலாநம் மவருரை வருளல் வேண்டும்!

வெள்ளாட்டு வேலைகளில் வேண்டாப் பேச்சில்
　　வெறும்வாயைச் சப்புவதில் விற்பார் நேரம்
முன்னாட்டில் முள்நீக்க முன்னே மூச்சாய்
　　முன்னேற முயல்வார்கள் முயற்கொம் பாகும்
கொள்ளாட்டில் அதுசூழல் கோயில் மேளம்
　　கொக்கொக்க ரக்கென்று குதிப்பார் பின்னர்
தள்ளாட்டம் தலைமீறத் தாமே தாழ்வார்
　　தண்ணல்லூ ரோயின்னர் தழைத்தல் வேண்டும்!

எடுப்பார்கள் இருப்போர்கள் தடுப்பார் தாங்கார்
　　ஏனென்றால் ஏனென்பார் எண்ணார் ஏதும்
முடிப்பார்கள் முயல்வோர்கள் முயலார் முந்தி
　　முற்றாகச் சிந்தனைகள் முன்பின் இன்றிக்
கெடுப்பார்கள் கேட்டாலோ கேளாக் காது
　　குடிப்பார்கள் குதர்க்கங்கள் ஊறிச் சும்மா
நடிப்பார்கள் இவர்போக்கை நல்லூர்த் தேவா
　　நாமுய்ய அறிவுவழி நாட்டல் வேண்டும்!

ஒட்டார்பின் சென்றுங்கே ஓமாம் என்றே
ஓடேந்திப் பலபக்கம் ஓடி ஆடி
விட்டார்கள் பலபேர்கள் வீரம் மானம்
விற்றூர்கள் இனப்பண்பு வீணே தாமாய்க்
கெட்டார்கள் முப்பாலைக் கேட்டார் இல்லைக்
கிளித்தட்டு விளையாட்டுக் கீச்சு மாச்சுத்
தட்டாது நல்லறிவைத் தனிநல் லூரோய்
தாமாக இவர்மாறத் தரல்நீ வேண்டும்!

நம்மவர்கள் நல்லவர்கள் நல்லூர் வேலா
நற்செயலில் வல்லவர்கள் நன்றே ஆனுல்
தம்மையறி யாதவர்கள் தமிழின் பண்பின்
தன்மைதெரி யாதவர்கள் அதனுல் தாழ்ந்தார்
வெம்மையர சாட்சிமிக வெந்தார் நொந்தார்
வேறுபட நின்றுரிமை விட்டார் கெட்டார்
செம்மையுடன் செந்தமிழர் சிறப்பாய் ஓங்கச்
செய்தருள வேண்டுமெழில் தேர்நல் லூரோய்!

## இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர். வி. கந்தவனம் |
| ஒலியிழை நாடாக்கள் சமய வாழ்க்கை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| சைவத்தின் பெருமை | |

உ

# வாழிய இவர்கவி வன்மை

கந்த வனத்தது பாட்டு
கனியுறு தேன்சுவைக் கூட்டு
சிந்தையை அவற்றிடை நாட்டு
தெளிவுறு மடைமையை ஓட்டு.

"நல்லூர் நாற்பது" நாடு
நங்கவி நூலது தேடு
நல்லையிற் கந்தனைப் பாடு
நலையுறு பந்தனை சாடு.

எந்தவ னத்தினில் எங்கும்
இருந்திடு வேளையும் அங்கும்
கந்த வனக்கவி பொங்கும்
கருத்தினில் ஒளிதருந் தங்கும்.

வந்தனை செய்குவை மனமே
வளமுறு கவியிவை தனமே
கந்தனை எண்ணுவை முனமே
கழலிணை பாடுவை தினமே.

வாழிய இவர்கவி வன்மை
வாழியிவ் வுலகிடை நன்மை
வாழிய ஆழியின் தண்மை
வாய்ந்தநற் கவித்துவத் தன்மை.

- "சொக்கன்"

